## <u>நினைவுகள்</u>

தோட்டத்திற்குப் போயிருந்தேன்

எங்காவது பயணம் போய் வருவதென்றால் எனக்கு எப்பொழுதும் கொள்ளை ஆசை. அண்மையோ சேய்மையோ புதுப் புது அனுபவங்களை நெஞ்சில் முடிந்துகொள்ள இதயம் தவியாய்த் தவிக்கும்.ஏடுகளில் பார்த்துத் தகவல்களை அறிந்துகொள்ளலாம் என்றாலும் நேரடியாகச் சென்று மனிதர்களையும் அவர்கள் வாழும் சூழல்களையும் கண்டு வருவது இதயத்திற்கு என்றும் இதமானது.

எங்குப் போய் வந்தாலும் பிறந்த மண்ணைத் தரிசிக்கிற அனுபவம் போலாகுமா? அது நினைக்க நினைக்க நெஞ்சில் இனிக்கும் இனிய அனுபவம். சிறுவனாக இருந்தபோது வாழ்ந்த வீடு, தோழர்களோடு விளையாடிய தெரு, சுதந்திரமாய் சற்றிச் திரிந்த இடங்கள், அன்பாகப் பழகிய மனிதர்கள், மழையில் நனைந்து ஆட்டம் போட்ட நாட்கள், பட்டம் விட்டுக் களித்த கணங்கள் எல்லாம் எந்தக் கால நதியிலும் கரைந்து போகாதவை.

பிறந்த மண்ணிலேயே நிலைக்கொண்டு வாழும் வாழ்க்கை எல்லாருக்குமா வாய்க்கிறது? கல்வி நிமித்தமாகவோ வேலை நிமித்தமாகவோ பிறந்த மண்ணிலிருந்து பிரிந்து வேறெங்கோ வாழ வேண்டிய சூழல் பலருக்கு நேர்ந்து விடுகிறது.

ஆனாலும், அந்தப் பிரிவுதான் பிறந்த மண்ணின் மீதான காதலைத் தீவிரமாக்குகிறது. அந்தப் பிரிவுதான் இளமைக்கால நினைவுகளின் வண்ணங்கள் வெளுக்காமல் பாதுகாக்கிறது.

பிறந்த மண்ணுக்குப் போய் வருகிற வாய்ப்பு எனக்கொரு நாள் வாய்த்தது.

ஓர் ஏப்ரல் மாத
வெயிற்பொழுதில்
என்னைத் துப்பிவிட்டு
புழுதியைக் கக்கிவிட்டு
புறப்படுகிறது பேருந்து...

நான் நடக்கிறேன்...
அதே மண்!
எந்த மண்ணில்
என்றன் பாதங்கள்
அழுந்த பதித்து
நடை பயின்றனவோ
அதே மண்!

சிறுவயதில் பாதம் பதித்த மண்தான். அதே கால்கள்தான். ஆனால், பிறந்த மண் மீதான பார்வையின் அடர்த்தி அதிகமாகிவிட்டதே! காலத்தின் இடைவெளி மனநிலையிலும் ஏதோ மாற்றத்தை விதைத்துவிட்டதே!

பத்தாண்டுகளுக்குப் பின்
ஆருயிர்க் காதலியைத்
தரிசிக்கும் ஆவல்போலும்
பிறந்த மண்ணில்
பாதம் பதிக்கிறேன்...

சுற்றிலும்
நிறம் வெளுக்காத
பச்சைப் பிரதேசங்கள்
என் கற்பனை நடவுகளுக்குக்
களமாய் இருந்த
இயற்கை வயல்கள்

பச்சை இரத்தம் பாய்ந்த ரப்பர்க் காடுகளும் அதன் மையத்தில் குவிந்திருந்த தோட்ட லயங்களும் என் கற்பனையின் கஜானாக்கள். அங்கிருந்துதான் அவ்வப்போது எனக்குக் கிடைக்கிறது என் படைப்புகளுக்கான உந்துசக்தி.

அடிக்கடி பெய்யும் மழை
இடுப்பை அரித்தாலும்
ஒரு மிடுக்கோடு
நீண்டிருக்கும் செம்மண்சாலை
தொடர்ந்து நடக்கிறேன்...

கிழக்கு மேட்டில்
தண்ணீர் மருந்தையே
தானமாகத் தந்த மருந்தகம்

இன்னும்
'வாட்டம் போக்குகிறேன் வா'வெனும்
பழைய பல்லவியையே
ஒப்புவிக்கிறதோ!

பிரிக்க முடியாத தொப்புள் கொடி பந்தம்போல தோட்டத்தோடு இணைந்து கிடக்கும் செம்மன்சாலை. தோட்டத்தினுள் நுழையும் பேருந்து புழுதியைக் கிளப்பிப்போகும் அழகே தனிதான். மழை வந்தால் நிறம் திரிந்து ஓடும் நீர் எப்போதும் என் ரசிப்புக்குரியது.

மேனேஜர் பங்களா,
கிராணிமார் வீடுகள்,
தோட்ட லயன்கள்...
எல்லாம் அப்படி அப்படியே
ஏற்றமும் தாழ்வுமாய்...

சமத்துவ சமுதாயம் எப்போதும் சாத்தியமில்லை அங்கு. குரலை உயர்த்தும் முதலாளிகள். கைகட்டி வேலை செய்யும் தொழிலாளிகள். இரு தரப்புகளுக்கும் இடையே நிலவும் இடைவெளியை விளம்பும் குடியிருப்புகள். நான் வசித்த லயத்திலிருந்து அண்ணாந்து பார்த்தால் கிராணிமார் வீடுகளின் ஊடே மேட்டில் கண்ணுக்குத் தெரியும் மேனேஜர் பங்களா.

கோவிலுக்குப் பக்கத்தில்
செல்லாத காசுகளைச்
செல்ல வைத்த
கலைமகள் நூலகம்

நிறத்தில் கொஞ்சம்
நீர்த்தாலும்
இன்னும்
உயிர் தாங்கி நிற்கிறது.

மண்ணில் விளையாடிய
மண்புழுக்களைப்
புத்தகப் புழுக்களாய் மாற்றிய
புண்ணியத் தளமது.

என் நினைவில் இனிக்கிறது

வாசிக்கும் பழக்கம் எனக்கு நேசிக்கும் பழக்கமாக மாற என்னை ஆற்றுப்படுத்திய அண்ணனையும் அவர் தம் நண்பர்களோடு சேர்ந்து உருவாக்கிய கலைமகள் நூலகத்தையும் நான் எப்படி மறக்க முடியும்? அதன் பொலிவு குறையலாம். ஆனால், மாணவர்கள் அதன் நிழலில் பெற்ற பயனை, அது தந்த உத்வேகத்தை மறக்கமுடியுமா?

இதென்ன?
இத்தனை அந்நிய முகங்கள்

என்னைப் பார்வையால்
விசாரிக்கின்றன?

நான்தான் அந்நியமென்று
இவர்கள் விளம்புகிற
விந்தை பாருங்களேன்

ஒவ்வொரு லயனாய்
பழகிய முகங்களை
பார்த்து வருகிறேன்
என்னுள் இறுக்கம் உடைந்து...
கண்களில் பூத்தன நீர்மணிகள்...

ஆண்டுகள் பத்து
ஆனபோதிலும்
மீண்டும் கூட்டைக்
கண்டுப்பிடித்த குயிலாய்
பழைய இராகங்களைப்
பரிமாறிக் கொள்கிறோம்

எங்கிருந்து முளைத்தன இத்தனை புதுமுகங்கள்? பழகிய முகங்களிலும் காலத்தின் கோலத்தைக் காண முடிந்தது. கண்களை இடுக்கி என்னை ஞாபகப்படுத்த முயன்று தோற்றுப்போன முகங்கள். “அந்தப் பயலா நீ? ” என அடையாளங்கண்டு பொக்கை வாயில் புன்னகை சிந்திய முகங்கள். என்றோ பழகிய தோட்டத்து ஆத்மாக்களோடு மீண்டும் பேசுவது இதமானது.

“எப்படிலா ஜோ
இப்படி?

முச்சந்திக் கடையில்
பழகிய குரலொன்று
உரிமையாய்த் தடுக்கிறதே
யாரது?

ஓ...
ஒன்றாய் மங்கு துடைத்து
மாடு மேய்த்த மனோகரனா?
என்ன இது?
முகமெங்கும் புற்களாய் தாடி

“காதல்தான் வேறென்ன
கண்டுக்காதே”
வியப்பில் எனக்கு
விழிகள் விரிகின்றன

தமிழ்ப்பள்ளியில் என்னோடு ஒன்றாகப் படித்த மனோகரன்தான். காதலின் மாயவலையில் அவனும் சிக்கியிருந்தான். அது அவன் முகத்தில் கலகலப்பைத் திருடிக் கவலையை விதைத்திருந்தது. அவனைப் பார்த்ததுமே பள்ளித் தோழர்கள் மோகன், இராமசாமி, செல்வராஜ், இராமன், செல்லையா போன்றோரின் நினைவுகளும் நெஞ்சில் எட்டிப்பார்க்கத் தொடங்கி விட்டன. ஆனால், அவரவர்களும் இடம் பெயர்ந்து எங்கெங்கோ போய்விட்டதால் யாரையும் சந்திக்க முடியவில்லை.

இறுதியாக, நான் வாழ்ந்த வீட்டைப் பார்க்கப் போனேன். தோட்டத்தில் கைவிடப்பட்ட லயங்களில் அது இருந்தது. தெருவில் புதர் மண்டியிருந்தது. இரு புறமும் லாலான்கள் நீண்டு வளர்ந்திருந்தன. மனித நடமாட்டமே இல்லாமல் தனிமையில் மௌனமாய் நின்றன வீடுகள்.

எங்கள் வீடு பலகைகள் இழந்து, பச்சை வண்ணம் இழந்து, சிமெண்டுத் தரைகள் உடைந்து சேதமாகியிருந்தது. அதைப் பார்க்கும்பொழுதே இதயத்தை ஏதோ அழுத்திப் பிசைவதாக உணர்ந்தேன்.ஒரு

காலத்தில் கலகலப்பாக இருந்த வீடுகளும் அந்தத் தெருவும் சோகத்தை மௌனமாகப் பேசிக்கொண்டிருந்தன.வீட்டுக்குள் நுழைந்து நான் நடமாடிய ஒவ்வொரு இடத்தையும் பார்த்தேன்.என் கண்களில் அரும்பிய நீர் துளிகளில் காட்சிகள் மங்கலாய்த் தெரிந்தன.

திரும்புகிறேன்...
லயன்கள் ,கிராணிமார் வீடுகள்,
கோயில்,நூலகம்,மருந்தகம்
பயணம் சொல்லிப்
பாதம் பதிக்கிறேன்.

இதென்ன?
பாராங் கல்லைப்
பதுக்கிவைத்தார்?
இப்படி கனக்கிறதே
இதயம்.

ந.பச்சைபாலன்